சித்திரக்கலை பள்ளித்திட்டம் - 12(2018)

(சித்திரக்கலை I) - 100 புள்ளிகள்

(சித்திரக்கலை II) - 100 புள்ளிகள்

(சித்திரக்கலை III) - 100 புள்ளிகள்

மொத்தம் 300 புள்ளிகள்

இறுதிப்புள்ளி = 300 ÷ 3

= 100 புள்ளிகள்

agaram.lk

சித்திரக்கலை I- பகுதி I - 40 புள்ளிகள்

பகுதிII - 20 x3=60 புள்ளிகள்

பகுதிI

| | | | |
|---|---|---|---|
| 1) 4 | 11) 4 | 21) 1 | 31) 3 |
| 2) 2 | 12) 1 | 22) 2 | 32) 3 |
| 3) 3 | 13) 3 | 23) 3 | 33) 4 |
| 4) 2 | 14) 2 | 24) 3 | 34) 3 |
| 5) 4 | 15) 2 | 25) 5 | 35) 2 |
| 6) 4 | 16) 1 | 26) 3 | 36) 2 |
| 7) 3 | 17) 5 | 27) 4 | 37) 4 |
| 8) 2 | 18) 2 | 28) 5 | 38) 4 |
| 9) 2 | 19) 4 | 29) 1 | 39) 3 |
| 10) 4 | 20) 5 | 30) 2 | 40) 3 |

வினா 1

1)

- பேராசிரியர் செனரத் பரணவித்தான சிகிரியா குபேரரின் குபேரபுரியை சித்தரிக்கின்றது. இவ்வுருவங்கள் குபேரரின் மகள்மார்களான மேகலதா(மேகம்),விஜயலதா(மின்னல்) ஆகியோரைக் குறிப்பதாகவும், நீல நிற மங்கையர்கள் மேகலதா ஆவதோடு பொன்னிறத்தில் உள்ள மங்கையர்கள் விஜயலதா (மின்னல்) ஆவார்கள் எனவும் கூறியுள்ளார்.

- H.C.P பெல் காசியப்ப மன்னனின் அரசிகளும் பணியார்களும் சித்தரிக்கப்பட்டுள்ளதெனக் கூறுகிறார்.
- H.C.P பெல் அவர்களின்கருத்துப்படி அரசகுல மாதர்கள் பொன்னிறத்திலும் பரிவாப் பெண்கள் நீல நிறத்திலும் காட்டப்பட்டுள்ளனர். அவர்கள் பிதுரங்கல விகாரையை வணங்க செல்லத் தயாராகிய நிலையில் கைகளில் மலர் ஏந்திய வண்ணம் இருப்பதாகக் காட்டியிருக்கிறார்.

2)

- ஓவியங்களை வரையப் பொருத்தமான விதத்தில் சாந்து பூசி கற்பாறை ஒப்பமாக்கப்பட்டுள்ளது.
- அதற்காக வைக்கோல், உமி, களிமண், தாவர நார் வகைகள், தாவர பசை (பிசின்) சுண்ணாம்பு ஆகியன பயன்படுத்தி சாந்துக் கலவை தயாரிக்கப்பட்டது. கரடுமுரடான மேற்பரப்பைக் கொண்ட கற்பாறை மீது சாந்து பூசி ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.
- சாந்து உலர முன் ஓவியங்கள் வரையப்பட்டதாக நம்பப்படுகிறது. அந்நுட்பமுறை பிரெஸ்கோ புவனோ என அழைக்கப்படுகிறது. இந்நுட்ப முறையைத் தவிர டெம்பரா அல்லது உலர்ந்த சாந்து மீது வரையப்பட்தென கருத்து வெளியிட்டுள்ளனர்.

(06 புள்ளிகள்)

3)

- காவியத்தில் வரும் அடிப்படை அம்சங்களை கருத்துடன் வெளிப்படுத்தியுள்ளனர்.
- உயிரோட்டமுள்ள சுதந்திரமான இரேகைகளை பயன்படுத்தியுள்ளனர்.
- வர்ணத்திலும், இரேகையிலும் பெண்களின் உருவங்கள் முப்பரிமாணத் தன்மையுடன் வெளிப்படுத்தியுள்ளனர்.
- பல்வேறு அசைவுகள் மூலம் வெவ்வேறு விதத்தில் மெருகூட்டத்தக்க முறையில் காட்டப்பட்டுள்ளது.
- கருப்பொருளுக்கேற்ப ஒழுங்கமைத்தல்.
- சகல சித்திரங்களுக்கும் சித்திங்களுக்கும் இரேகை பயன்படுத்தாது நேரடியாக செய்யப்பட்டுள்ளன. (06 புள்ளிகள்)

**வினா 3**

1. நல்ல சமாரியனி, பாதகாணிக்கை, சிலுவையில் இரேகை (04 புள்ளிகள்)

2.

- முதலியார் A.C.G.S அமரசேகர எண்ணெய் வர்ணத்தைப் போன்ற நீர் வர்ணத்திலும் திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.
- பிரதிமை சித்திரங்கள் (PORTRAIT) சித்திரங்களுக்கிடையே – சில
  1. இங்கிலாந்து ஜோர்ஜ் மன்னின் உருவம்
  2. சமகாலத்து அரசியல் தலைவர்களின் வடிவங்கள்
  3. அனஹாரிக தர்மபாலாவின் உருவம் (தர்மபாலா)
  4. G.P மனனசேகர உருவம்
  5. C.W.W கன்னங்கரா உருவம்.
- இச்சித்திரங்களின் பொருட்டு அமரசேகர அவர்கள் எண்ணெய் வர்ணத்தை பயன்படுத்தியுள்ளார்.
- தாத்தவீகத்தன்மைக்கு முக்கியத்துவம் அளித்து சித்திரங்களை வரைந்துள்ளார்.
- சாஸ்திர முறையிலான கோட்பாடுகளின் அடிப்படையில் சித்திரங்களை வரைந்துள்ளார்.
- சகல விபரங்களையும் வர்ணச்சாயல்கள் மூலம் வெளிப்படுத்தப்படல்.
- உச்ச பிரகாசம், கடுமையான இருள் போன்ற தன்மைக்கு இடைப்பட்ட இடைவெளி வர்ணச்சாயல் தன்மை முக்கியத்துவம் பெறுகின்றன.
- நிழற்படப் பண்பு தெளிவாகக் காணப்படும். (06 புள்ளிகள்)

3.

- சார்ளிஸ் அவர்களின் ஓவியக்கலை.
- எம் சார்ளிஸ் அவர்களுடைய புத்த சரிதை தொடர்பான சித்திரங்கள் பௌத்த மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்து வீடுகளில் பயன்படுத்தப்பட்டது.
- பல சந்தர்ப்பங்களில் விகாரை ஓவியங்கள் ஒரே மாதிரியாகக் காணப்பட்டதால் மக்கள் மத்தியில் இச்சித்திரத்தின் பாணி உயர்ந்த தரத்தில் நிர்மாணிக்கப்பட்டது.



agaram.lk

- இவ்வோவியங்களில் இயற்கைத் தன்மை வெளிப்படல், வெவ்வேறு வர்ணச்சாயல், உயர்வுகள் காணப்படுவதால் சாதாரண மக்கள் இவ்வோவியக் கலைக்கு அதிக விருப்பத்தை காட்டியுள்ளனர்.
- இவருடைய ஓவியங்கள் ஐரோப்பிய யதார்த்த பாணியில் அமைந்திருந்தது. (10 புள்ளிகள்)

**வினா 4**

1. லஸ்கோ ,மொன்டிஜோம், சோவே, லாடெலிநங், நியோ (04 புள்ளிகள்)
2.

- இலங்கை ஆதிவாசிகளின் ஓவியம்
- மிக ஆரம்ப மட்டத்தில் பிரமாணத்தில் சிறிய சித்திரமாகும்.
- பிராணிகள், மனித வடிவம் கேத்திர கணித வடிவ குறியீடாகும்.
- மனிதவடிவமும், பிராணிகள் வடிவமும் சித்தரிக்கப்பட்டுள்ளதுடன் விசேடமாக மாற்றம் எதுவுமே இல்லை.
- வேட்டையாடுதல் சித்தரிக்கப்படவில்லை.
- பிராணி வடிவங்களிடையே யானை, சிறுத்தை, மான், மாடு, குரங்கு, முதலை.
- இவ்வடிவங்களை விளக்கமாக இனங்காண்பது கஸ்டம்.
- வெளிச்சம் படுகின்ற பகுதிகளில் வரையப்பட்டுள்ளது.
- சாம்பல்,களி, சுண்ணாம்பல், வெண்களி வர்ணம் பயன்படுத்தப்படல்.
- பிகில்லகொட குகையில் விரல்களில் இலைச்சாற்றினைகலந்து வரைந்துள்ளனர் என "ஜெலிக்ஸ் மன்" கூறுகிறார்.
- தட்டையான முறையில் வர்ணம் பூசப்பட்டதுடன் வடிவமைப்பு சேர்த்து விளக்கமற்று காணப்படுகிறது.
- தமது கணவர் வெளிப் பிரயாணத்தில் உள்ள சந்தர்ப்பத்தில் குகையில் உள்ள பெண்களினால் வரையப்பட்டதாகக் கூறப்படுகிறது நேரத்தை போக்குவதற்காகவோ அல்லது மனத்திருப்திக்காகவோ வரைந்திருக்கலாம்.

**ஐரோப்பிய வாசிகளின் ஓவியம்**

- பிராணிகளின் உண்மையான உடல் இயல்பை காட்டுகின்ற இயற்கையான தன்மையுடனும் அதிலும் பார்க்க விசாலமான அமைப்பிலும் காணப்படுகிறது.
- பிராணிகளின் வடிவம் இயற்கையான தன்மையில் வரைந்துள்ளதுடன் மனித வடிவங்களை எளிமையாகவும் குறியீட்டு தன்மை கொண்டதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆகையினால் மிருக உருவம் முனைப்பாக தெரிகின்றது.
- வேட்டைகாரனின் வேட்டையாடப்பட்ட பிராணிகளின் உருவம் வரையப்பட்டுள்ளது.
- மிருகங்களிடையே பைசன் மாடு,பனி மான்,குதிரை,மாமத் யானை,மாடுகள், பன்றிகள்,ஆடு என்பன முக்கியமானது.
- குகைகளில் இருளான பகுதிகளில் வரையப்பட்டுள்ளதுடன் மிருகங்களை மிக தெளிவாக இனங்காணக்கூடியவாறு காணப்படுகிறது.
- கனி, கரி, கல்வகை ஆகியவற்றை தட்டி தயாரிக்கப்பட்ட வர்ணம் மிருகஇரத்தம் (கொழுப்பு) எண்ணை ஆகியவற்றுடன் கலந்து பயன்படுத்தப்பட்டுள்ளது.
- மரம்,மரக்குச்சி ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தூரிகை பயன்படுத்தப்பட்டது.
- ரேகையின்மூலம் குறிப்பிடுதல்.
- உருவங்களை வரைவதற்கு பயிற்சியாளன் ஒருவரால் பயிற்சி அளிக்கப்பட்டது.
- இந்த உருவங்கள் வரைவதற்கு ஒரு மாய சக்தி(magic) செயல்படுவதாக கருதப்படுகிறது.

(06 புள்ளிகள்)

3. **நோக்கம்**

❖ இந்த வடிவங்கள் வரைவதன் பொருட்டு அத்தியாவசியமாக பின்பற்ற வேண்டும் என்று நினைக்கின்ற மாயை நம்பிக்கையின் காரணமாக, இறந்த பிராணிகளின் ஆத்ம சாந்திக்காகவும் இதனால் மீண்டும் தமக்கு இப்பிராணிகள் கிடைக்கும் என்கின்ற நம்பிக்கையின் அடிப்படையிலும்.

agaram.lk

**தலைப் பண்புகள்**

- ❖ பிராணிகளினூடாக வடிவ அமைப்பு இதனில் இயல்புகள் அதனுடைய சரித சக்தியையும் காட்டுதல்.
- ❖ தற்காலத்து கலைஞர்கள் பின்பற்றுகின்ற ஏதாவது ஒரு கோட்பாடுகள் நுட்பம்.
- ❖ (தூர தரிசனம் பிரமாணம், தெளித்தல், மங்கிச் செல்லும் பண்பு)
- ❖ மிருகங்களின் உடல் கட்டமைப்புக்களில் முப்பரிமாண இயல்புகளை வெளிக்காட்டுதல்.
- ❖ குகைச் சுவர்களில் மிருகங்களின் இயற்கை அமைப்பு.
- ❖ சித்திரத்தில் கோடுகளின் பயன்பாடு பிழை இன்றி பயன்படுத்தி உயர்மட்ட பூரணப்பாட்டை பெறல்.
- ❖ அவதானிப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற அனுபவங்கள் மூலம் மாற்று வடிவங்களை வரைவதற்கு உள்ள திறன் வெளிப்படுகிறது.
- ❖ (அல்ராமீராவில் உள்ள பைசன் மாட்டின் முக்காரம் இடும் மாட்டின் தலை மேலே தூக்கிய மாட்டின் வால், கால்களின் காணப்படும் மெய்நிலை, முக்காரம் இடுகின்ற இயல்பு ஆகியவை சிறப்பாக காணப்படும். (10 புள்ளிகள்)

**வினா 5**

1. இறுதி இராப்போசனம்
மேரி மாதாவும் கானேஷன் மலரும்
புனித யோனும் மரியாளும்
பாறை மீது கன்னி (பாறைக் கன்னி)
(04 புள்ளிகள்)

2.

- சிஸ்டைன் தேவாயலத் கூரையில் வரைவதன் பொருட்டு உலகையே படைத்தல் எனும் கருப்பொருளை தெரிவு செய்துள்ளார்.
- கூரையில் காணப்படுகின்ற சதுர, முக்கோண அமைப்புக்களுக்கேற்ப சித்திரங்களை வரைந்துள்ளார்.
- சூரியன் சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தல்.
- இருளிலிருந்து ஒளியைப் பிரித்தல் (வெளிச்சத்தைப் பிரித்தல்)
- ஆதாம்மை படைத்தல்
- ஏவாலை படைத்தல்
- ஆதாமையும் ஏவாலையும் சொர்க்கத்திலிருந்து விரட்டுதல்.
- நோவாவின் தியாகம்
- வெள்ளப்பெருக்கு (ஜலப் பிரலயம்)
- இடைவெளிகளை நிரப்புவதற்கு எதிர்கால தீர்க்கதரிசிகளின் உருவங்களை வரைந்திருத்தல்.
- இவ்வோவியத்தில் இரேமியாவும்,கடவுளின் உருவமும் பிரதான இடத்தை பெறுகின்றது.

(06 புள்ளிகள்)

agaram.lk

3.

- எதன்ஸ் பாடசாலை
- பர்னாசிஸ்
- டிஸ்பியூனர்
- சிஸ்டைன் மடோனோ
- அல்பா மடோனா

- ஏசுவின் உடுமாற்றம்
- மெடோனா ஒப் சேயா(மடோனாவும் கதிரையும்)ஷ
- மேரி மாதாவிற்கு கிரீடம் தரித்தல்.
- செயற்பாட்டுடன் கூடிய மனித உடுக்களை மிகவும் உயிரோட்டமுள்ளதாகவும் வரைவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.
- கடந்த கால நிர்மாணங்கள் பலவற்றை உலகிற்கு வெளிப்படுத்துவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சிறப்பாகவும் துல்லியமாகவும் பயன்படுத்தியுள்ளார்.
    - தனது ஓவியத்தினூடாக வெளிப்படுகின்ற மனித மெய்நிலைகளையதார்த்தமாகவும் உயிர்த்துடிப்புடனும் முக பாவத்துடனும் வரைதல்.
    - எதன்ஸ் பாடசாலை ஓவியம் அவருடைய படைப்புக்களில் விசேடமானது.
    - இச்சித்திரம் வத்திக்கானிலுள்ள புனித பீற்றர் தேவாலயத்தில் ஸ்டென்சா டெலா சிக்னசுரா மண்டபத்தில் இவ்வோவியம் வரையப்பட்டுள்ளது.
    - இவ்வோவியத்தில் தூர தரிசனம், ஒளிநிழல் அங்க அசைவு முகபாவங்கள் சிறப்பாகக் காட்டப்படல்.
    - ஓவியத்தின் மத்தியில் தத்துவ ஞானிகளான அரிஸ்டோட்டல்,பிளேட்டோ,பைதகரஸ் காட்டியுள்ளதுடன் அவர்களின் உரையாடல் எண்ணங்கள் போன்றவற்றை ஓவியத்தினூடாக வெளிப்படுத்தி உள்ளார்.
    - இக்கருத்தை சாஸ்திர அளவுப் பரிமான முறைப்படி வரையப்பட்டிருத்தல்.
    - மரியாலை சிங்காசனத்தில் அமர்த்தும் காட்சியில் மரியாலை புனிதத்துவமான முகபாவத்துடனும் உடலின் ஏனைய அங்கங்கள் சிறப்பான முறையிலும் காட்டப்பட்டுள்ளமை சிறப்பானதாகும்.
    - இவ்வோவியத்தல் மரியாலின் கருணைத்தன்மையும் பாசமும் இரு குழந்தைகளின் இளந்துடிப்புத் தன்மையும் மொழு மொழுப்பான அங்க அமைப்பில் புஸ்தியான உடல் அமைப்புடன் மிக அழகாக வரையப்பட்டுள்ளது.
    - மலைச்சாரலின் பின்னனணியுடன் கூடிய பர்னாசியஸ் ஓவியம் மிகவும் அழகுணர்ச்சிகளுடனும் எதன்ஸ் பாடசாலை ஓவியத்துடன் ஒத்து உள்ளதாக காட்டப்பட்டுள்ளது.
    - மடோனா ஓவியத்தில் காட்டப்பட்டுள்ள இரு குழந்தைகனில் துடிப்புத்தன்மை மிக சிறப்பாக காட்டப்பட்டுள்ளது.
    - அல்பா மடோனா ஓவியத்தில் மேரிமாதாவின் முகம் அமைதி, காருண்யம், சாந்தம் மனித நேயத்துடன் வெளிப்படுத்திக் காட்டும் ரபாயலின் நுட்பத்திறன் வெளிப்பாடாகின்றன.

(10 புள்ளிகள்)

agaram.lk